மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு இயக்குநர் அனுப்பிய முந்தைய கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டது. இடர்பாட்டுப்படி வழங்குவதை மேலும் பல பிரிவுகளுக்கு நீட்டிக்க வேண்டாம் என ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளதாலும் அவ்வாறு அனைத்துப் பிரிவுகளுக்கும் இடர்பாட்டுப்படி வழங்க கோருவது நியாயமற்றது என்பதாலும் 1-4-1992 நாளிட்ட அரசுக் கடிதம் மூலம் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 568, திரு. வே. தமிழரசு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

568—

நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

*5613— திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூரிலிருந்து அருகிலுள்ள கிராமங்களில் உள்ள கால்நடை பராமரிப்பிற்காக ஒரு நடமாடும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

(ஆ) இந்த வசதி மலைவாழ் மக்களுக்கும் விரிவாக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதியில் கல்ராயன் மலை, பைத்தூர், தவளப்பட்டி, கீழ்க் கொம்பை, மேல் கொம்பை, போன்ற நாற்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் ஏழை மலைவாழ் மக்கள் பல்லாயிரக்கணக்கான கறவை மாடுகளையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளையும் வளர்த்து ஜீவனம் செய்து வருகிறார்கள். இவைகளுக்கு திடீரென்று கோமாரி போன்ற கொடிய நோய் ஏற்பட்டு விட்டால் பல மாடுகள் ஆடுகள் இறந்து விடுவதால், இந்த

மலைவாழ் மக்கள் நலனைக் கருதி இந்த பகுதியினருக்கு 'மொபைல் வெட்ரினரி டிஸ்பென்சரியை' ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் வட்டத்தில் ஏற்கெனவே இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல் பட்டு வருகிற காரணத்தால் ஆத்தூரில் மேலும் ஒரு நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க தற்சமயம் வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக் கப்படுகிறது.

வினா எண் 569—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

569—

கிருட்டிணகிரி பால்பண்ணை.

*6064—திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா ககளுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருட்டிணகிரி பால்பண்ணையில் தயாரிக்கப்படும் பால்பவுடர், நெய், வெண்ணெய் ஓர் ஆண்டுக்கு எவ்வளவு ?

(ஆ) இவைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றனவா?

(இ) இவைகளை விற்று பால் உற்பத்தியாளர்களுக்கு தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்